# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

௪. புத். சஞ். ௨௨.] ௲௮௱௪௪ ௵. கார்த். ௰௫. ௨௮. தேதி வியாழக்கிழமை, Thursday, November 28, 1844. [Vol. IV. No. 22.


## நித்தியாநித்தியவித்தியாசம்.

### அம். வித்தியாசம்.

#### மரண விசேஷம்.

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த சர்வவல்லவராயிருக்கிற பரம கத்தர் அருளிச்செய்த வேதவுதாரணத்தைக்கொண்டு திருச்சபையாரியாவருக்கும் அறிவிக்கிறதாவது—மே மேந்தோவோமோக்குய்யாப்புல்விலெ— யேஸ யேத்தின் புலவர்ரேமம்றெவைற்தோரிசு—என்பது துகளாயிருக்கிறமனுஷர் மறுபடியுந்துகளாய்ப்போவார்களென்று நினைத்திருவென்றவாறு. வெய்யில் முகங்கண்ட பனியழிந்துபோகிறாப்போலச்சரீரசௌந்தரியமெல்லாம் மரணத்தோடழிந்துபோமென்றறி. நாளை அழிந்துபோகிற சரீரத்துக்காபரணமென்றுந் திரவியமென்றுந் தேடிவைத்து அதை நீராட்டி மினுக்கிப் பூஷணமணியக் கவலைப்படுகிறாய். பாதகா! அழியாத ஆத்துமத்துக்கொரு நினைவுமில்லை, கொஞ்சநாளையில் புழுகு சவாதணிகிற சரீரம் புழுவாய்ப் புழுத்து நாறிப்போம். இப்படிப்பட்ட பாண்ட சரீரத்துக்காக மாத்திரங் கவலைப்படுகிறாயே. மரணமடைகிறபோது நெகிழாத கட்டை போல அசையாமல்இருந்துகைகால்குளிர்ந்தயர்ந்துநாக்குவிழுந்து கண்பஞ்சிட்டு முகம்வாடி நெஞ்சுவற்றி வயிறூதிச் சிலேஷ்மம் அடைத்தாவிகுறைந்து சீவன் பிரிந்துபோகிற நேரம் சரீரத்துக்காகவேண்டி நீ பிரயாசப்பட்டதெல்லாம் அபத்தமென்று காண்பாய். சீவன் பிரிந்தவுடனே சரீரமானது அவலட்சணமாகித் துர்க்கெந்தம் வீசிப் புழுவாய்ப் புழுத்தழுகலாய் நாறித் துகளாய் அழிந்துபோமென்றறி. ஆ பாதகா! இப்படிப் புழுவுக்கிரையாய்ப்போகவோ சரீரத்தைச் சுகமாய் வளர்க்கிறாய்? இப்படி நாறவோ புழுகு சவாது பூசி மினுக்குகிறாய்? இப்படித் தூளாய்ப்போகவோ ஆசையோடே சரீரத்தை நினைத்து அழியாத ஆத்துமத்தை மறக்கிறாய்? இப்படிப்பட்ட கஷ்ட நேரம் வருமுதலே ஆத்துமத்துக்குறுதியாயிருக்கிற புண்ணியத்தைத் தேடிக்கொள். அப்படித் தேடினாலல்லோ சரீரம் அழிந்துபோனாலும் ஆத்துமம் பரகதியடையுமென்று ஆறுதலுண்டாம். நேரத்தோடே புண்ணியந் தேடாதிருந்தாற் சரீரம் அழிந்து போய் ஆத்துமம் நரகத்திலே வேகப்போகுமென்று சலிப்படைந்து சாவாய். அப்படிச் சாகாதபடிக்கு இன்றைக்கே மரணமென்று நினைத்து வருகிற பாவத்தைத் தள்ளிப் புண்ணியத்தைச் செய்திருந்தால்லோ காரியம். ஒரு இராச குமாரன் மரித்த தன் தகப்பனுடைய பிரேதத்தைக் காணவேணுமென்று சிறிது நாட்கடந்த பிற்பாடு பிரேதத்தை வைத்திருக்கிற கல்லறையைத் திறக்கச் சொல்லிப் பிரேதத்தைக் கண்டான். அந்தச்சரீரம் நாறி யூதிப் புழுத்துப் புழுக்கள் நெளுநொளென வருகிறதைக் கண்ட மாத்திரத்திலே வெகுவாய் அழுது பெருமூச்செறிந்து அவலட்சணப் புழுவுக்கிரையாய்ப் போகவோ சரீரத்தை வளர்க்கிறோம். இந்தத் துர்க்கந்தம் நாறவோ பரிமளவாசனை பூசுகிறோம். துன்மரணமானது இவரை இராசாவென்றறிந்து சங்கித்ததோ இல்லையே. அப்படிப்பட்ட துன்மரணம் வருகிறதற்கு முன்னே ஆத்துமத்தினுடைய அழியாத பரமகதியென்னும் பாக்கியத்தைத் தேடுகிறதே காரியமென்று இராச்சியபாரத்தை விட்டுத் தரித்திரனாய் மரண பரியந்தம்புண்ணிய வழியை அனுசரித்துக்கொண்டு நடந்தான். மரணத்தை நினைக்கிறதில் இந்த நல்ல விசாரம் அவனுக்கு வந்தாப்போல் உனக்கும் வரவேணும். ஆனால் மரணம் வருமென்றடிக்கடி நினைத்து மரணம் வருமுதலே உனக்காதரவாயிருக்கிற புண்ணியத்தைத் தேடி நடப்பாய். இப்போது தேடாத புண்ணியம் அந்தச் சமையத்தில் உனக்கு வந்து கைகூடுமென்று நினையாதே. அதெப்படியென்றால், அநேக நாளாய் ஒரு இராசாவைச் சேவித்த சேவகன் வியாதியாயிருக்கிறபோது இராசா அவனைப் பார்க்கிறதற்கு வந்து தம்பி பயப்படாதே உனக்கு நானிருக்கிறேன் வேண்டிய காரியத்தைக் கேட்டாற் றருவேனென்று சொன்னதற்குச் சேவகன் இராசாவைப் பார்த்து ஐயா, உம்மை முப்பது வருஷஞ் சேவித்ததற்கு அடியேனுக்குத்தருவாயில் மூன்று காரியஞ் செய்யும்—முதலாவது அடியேன் படுகிற வியாதியினுடைய கடூரத்தைச் சற்று நேரத்துக்கு மாத்திரம் நிறுத்தும். இரண்டாவது, என்னுடையஉயிரைச்சாவுகொண்டுபோகாதபடி தடைபண்ணும். அல்லவென்று மரணமடைந்தாலும்மாற்றும். ௩வது. இளைப்பாறுகிறதற்கு ஒருநல்ல ஸ்தலங்கட்டளையிடுமென்றுஞ்சொன்னான். அதற்கிராசா சலிப்புடனே சேவகனை நோக்கி நீ கேட்ட காரியங்கள் சகலத்துக்கும் அதிபதியுமாய் இராசாதிராசனுமாய் இருக்கிற பரம கத்தராலே மாத்திரந் தரக் கூடுமொழிய உலக இராசாக்களால்த் தரக் கூடுமோவென்றான். அப்போது சேவகன் பெருமூச்செறிந்து கண்ணீர்விட்டழுதுகொண்டு கிட்டவிருக்கிறவர்களைப் பார்த்துச் சொன்னதாவது, கேட்டீர்களோ இந்த இராசாவை முப்பது வருஷஞ் சேவித்தாப்போலே சருவத்துக்கும் அதிபதி கத்தனாயிருக்கிற பரம இராசாவை ஒரு நாழிகை நேரம் மாத்திரஞ் சேவித்தேனாகில் என் மனக்கவலை தீரும். இவரைச் சேவித்தநாளெல்லாம் அபத்தமாய்ப் போனதென்றிப்போது திஷ்டாந்தமாய் அறியலாயிற்று. இனிப் பிழைத்தேனாகில் நம்மை இரட்சிக்க வல்லவராயிருக்கிற கத்தரை மாத்திரஞ் சேவிப்பேனல்லாமல் அற்ப மனுஷருடைய சகாயத்தை நம்பேன். இந்தமட்டும் நம்பினது போதுமென்று சொல்லி ஆத்துமம் பிரிந்து செத்தான். ஆ, பாதகா! மரணம் ஒரு விசை வருகிறதல்லாமல் இரண்டு விசை வந்ததாகில் இரண்டாம் மரணத்தில்முந்தின மரணத்திலுண்டான குறைச்சலைத் தீர்ப்பேனென்று சொல்லலாம். மரணமொரு விசையென்றிருக்கையில் அதிற் பிழை வாராதபடிக்கு எச்சரித்துக்கொள்ளவேண்டும். செத்தவன் திரும்பிப் பிறப்பானென்று சில மூடாத்துமாக்கள் சொன்னாப்போலே சிந்தித்து மோசம் போகாதே. அதேதென்றால், கறந்த பால் முலையிற்றிரும்பப் புகாதது போலவும் பிறந்த பிள்ளை திரும்பத் தாய் வயிற்றிற் போக அறியாதது போலவும் கடந்த காலமும் வராததுபோலவும்செத்த மனுஷன் திரும்பப் பிறக்கிறதில்லையென்று திட்டமாய் அறிந்துகொள். ஒருவிசை சாகிறதில் அவலச் சாவு சாகாமல் எச்சரிக்கையாயிரு.— அசட்டையாயிருந்தாயாகில் அநேகம் பேர்களுக்கு வந்த அவல மரணம் போற் சாகிறது திட்டம். அதெப்படியென்றால், சார்துஆதுகாவென்ற இராசா காம சுகத்திலே அலைந்ததினாலே சரீரந் தளர்ந்து போயிற்று. அதற்குப் பரிகாரஞ் செய்துநிற்கையில் இராசா வஸ்திரத்திற்றீப்பறந்து ஒரிழைவழியாகத் தீபச்சுடர் பற்றி இழை வழியாய்ச் சரீரத்திலேறிச் சுணைத்தில் அக்கினியாய்ச் சரீரம் வெந்து செத்தான். ஆ, பாதகா! நினைத்திராதபோது இழைவழியாகச் சதியாக மரணம் ஏறி வந்து அந்த இராசாவைக் கொன்றுபோட்டுப்போனாப்போல் உன்னைக் கொன்று போடாதென்றறிவாயோ? இன்னங்கேள், சிலேசீசுவேதனென்றவனுங் கொந்தனென்றவனும் ஸ்திரி போகத்திற் பிராணனையிழந்து அவலமாய்ச் செத்தார்கள். இதுவுமல்லாமல் தலையார் மாணிக்கனென்கிறவன் அலங்கிருதமுள்ள நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையிற் செத்தான். இப்படி மனக்கிறையோனென்பவன் முந்திரிகைப் பழந் தின்றுகொண்டிருக்கையில் ஒரு விரை தொண்டையிற் சிக்கிக்கொண்டு புரைக்கேறி மூச்சுமுட்டிச் செத்தான். இவனைப்போலே செந்தோரென்றவன் குடித்த பாலிற் றலைமயிர் கூடவிறங்கினதினாற் சணத்திலே செத்தான். அறியோஷராவோவென்பவன் தான் அனுப்பின படைமனுஷர் எதிர்ப்படையை வென்றார்களென்று அக்களிப்படைந்து செத்தான். ஒருமேரென்றவன் மனச்சலிப்படைந்து செத்தான். தோபியாசென்றவன்விவாகம் பண்ணின நாளையில் தன் ஸ்திரியைக் கைப்பிடித்துக் கிரகத்திற் போகலாமென்று முன்காலடிவைத்துப் பின்காலடியெடுத்துவைக்குமுன்னே சரிரமயர்ந்து தடுமாறி விழுந்து செத்தான். ஆ, பாதகா! நேரமுந் தோகையுங் குறியாமல் மரணம் வருகிறது கண்டாயோ? இவர்களெல்லாஞ் செத்தாப்போலே நீ சாகிறதில்லையென்று திட்டமறிவாயோ? அறியாதிருந்தால் இவர்களுக்கு வந்த அவலமான மரணத்தில் அகப்படாதபடிக்கு உன்னை அந்த அவசரத்திலிரட்சிக்க வல்லவராயிருக்கிற

பரம கர்த்தரைஎப்போதும் ஆராதனைசெய்து அவருக்குப்பிரியமுள்ளவனாக அவருடைய வேதகற்பனையை மறவாமல் நடக்கிறதே காரியமென்றறிந்துகொள். மரணம் வருமுதல் உனக்குஸ்திரமுள்ள ஆஸ்பதமாயிருக்கிறவருனைச் சுகிர்த புண்ணியங்களினாலே கைக்கொள்ளத்தக்க தாற்பரியமாயிருந்தால் மரணத்துக்கு அஞ்சாமற் பார்த்திருக்கலாம். அந்தத் தேவருளில்லாமற் செத்தாயாகில் உனக்கு நரகமே கதியென்றறி.

எட்டாம் வித்தியாசம் முற்றுப்பெற்றது.

---

## தென்சமுத்திரத்தீவில் நடந்த சங்கதி.

(Missionary Enterprizes in the South sea.)

[Continued from page 210.]

இவைகள் யாவையுங் கேட்டவுடனே ஆண்டவர் இதற்காகத்தானுக்கும் என்னை நான் நினைத்த வழியாய்ப் போகவிடாமல் எதிர் காற்றை வரப்பண்ணி இவ்விடத்துக்கழைத்துவந்தாரென்று எண்ணிக்கொண்டு அஞ்ஞானிகளிருக்கிற குடியிருப்புகளுக்குப் போய் அங்கே இருந்த அஞ்ஞானிகளான தலைமைக்காரரைச் சமாதானப்படுத்தினேன். நான் இவர்களிடத்திற் போகையில் என்னுடனே கூட இராயதோங்குவின் மூன்று பிரதானிகளையுங் கூட்டிக்கொண்டு போனேன். இந்தப் பிரதானிகளில் ஒருவனாகிய தின்னோமன் என்பவன் தலைமைக்காரரில் ஒருவனுடனே பேசிக்கொண்டிருக்கிற சமையத்தில் அவன் கிட்டிச் சேர்ந்து அவனுடைய கையைப் பிடித்துச் “சகோதரனே! பசாசின் உடையைக் கழற்றிப்போட்டுப் பராபரனுடைய மனுஷனாகுவாயாக” என்று சொன்னான். இந்தச் செய்கை மனதுக்கு மிகவும் நன்றாய்க் கண்டது. ஆகிலும் அந்த அஞ்ஞானி இந்தப் புத்தியினால் உருக வேண்டிய பிரகாரமாய் உருகிப் பேச்சிலே எடுபடாமல் தான் மாத்திரந் தனியே எப்படிக் கிறிஸ்தவனாகக்கூடுமென்கிறது போலப் பேசிக் கிறிஸ்தவனாகவேணுமேயாகிற்றன்னோடொத்த மற்றுந் தலைமைக்காரருங் கிறிஸ்தவர்களாகவேணுமென்றுஞ் சொன்னான். அப்படியே மற்றுந் தலைமைக்காரருடனே பேசப்போய்ப் பின்னொரு கிராமத்திலுள்ள தலைமைக்காரனுடனே பேசினபொழுது அவன் நீங்கள் வந்தது நல்லதுதான்—ஏனெனிற் கிறிஸ்தவர்களுக்கும் எங்களுக்கும் நாளையிற்றினம் போரிருக்கட்போகுதேயென்றான். அதற்கு நான் போரிராதபடிக்கு அஞ்ஞானிகளாகிய நீங்களுங் கிறிஸ்தவர்களுஞ் சமாதானமாயிருப்பதற்காக அதுகாரியத்தைக் குறித்து உங்களுடனே பேசிச் சமாதானப்படுத்த வந்திருக்கறேனென்றேன். திரும்ப இவருடனே தேவ காரியங்களைக் குறித்துப் பேசினபொழுது அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவருடைய பெண்சாதி தானுங் கிறிஸ்தவளாக விரும்புகிறேனென்றாள். ஏதுக்காகவென்றால்கிறிஸ்தவர்களின் பெண்சாதிகள் பிள்ளைகள் நல்ல உடுப்பும் தலைக்குல்லாவும் படிப்புமுள்ளவர்களாயிருக்க நானொரு தலைமைக்காரனுடைய மனைவியாகவிருந்தும் இப்படிப்பட்ட சிறப்பெனக்கில்லை. அல்லாமலும் இதுபோலொத்தவனேக வசதியீனங்களை அஞ்ஞானிகளிற் காண்கிறேன் என்றாள். கடைசியாக எல்லாருக்கும் மேலான தலைமைக்காரனிடத்திற் போய்ப் பேசினவிடத்தில் அவர் எல்லாருங் கிறிஸ்தவர்களாகிறது தனக்குப் பெரிய சந்தோஷமென்று சொல்விப் பிறியமுள்ளவர்களெல்லாரும் எங்களுடனே கூடிக்கொண்டுபோய்ப் புத்திகேட்கலாமென்று உத்தரவுகொடுத்தவுடனே வெகு பேர் எங்களுடனே கூடிக்கொண்டுவந்தார்கள். இவர்கள் பிறியமாய் எங்களுடனே வருகிறதைக் கண்ட அஞ்ஞானிகள் அவர்களைக் கட்டிக்கொண்டழுது கொல்லப்பட்டுப் போகிறவனுக்காகப் புலம்புவது போலப் புலம்பினார்கள். இதற்கிடையிலே வேறொரு காரியஞ் சம்பவித்தது. அதென்னவென்றால் அஞ்ஞானிகளின் கூட்டத்துக்கு இராயதோங்கு தீவிற் கிறிஸ்தவர்களிலொருவன் தேவகாரியங்களைக் குறித்துப் பேசிக்கொள்ளுகையில் ஆவியினாலே ஏவப்பட்டவனாய் மிகவும் அனலாகவும் உரத்த சத்தமாகவுங் கேட்கிறவர்களுடைய இருதயத்திற் படத்தக்கதாகவும் பேசினதினாலே கேட்டவர்களுக்குள்ளே இவர்கள் ஒருவேளை எங்களைப் பலவந்தமாய்க் கூட்டிக்கொண்டு போகப்போகிறார்களென்பது போல ஒரு எண்ணமுண்டாயிற்று. அத்தருணத்தில் அவர்களுடனே கூட இருந்த பிரதானியின் பிள்ளைகளிற் பதினெட்டிருபது வயதுள்ள இரண்டு பெண்பிள்ளைகள் தகப்பன் பிடிபட்டுப்போகப்போகிறாரேயென்று பயந்து சொல்லிமுடியாத துக்கத்துடனே தலை மயிரைக் குலைத்துக்கொண்டு ஓடிப்போய்த் தகப்பனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதார்கள். நான் இந்தத் திடுகூறான காரியத்தைக் கண்டு அப்படிப்பட்டதொன்றுஞ் சம்பவிக்கமாட்டாது— அல்லாமலும் உங்கள் கண்ணையிற் சனங்கள்மிகுதியாயிருக்கக்கொள்ளநாங்கள்ஆயுதமில்லாதவர்களாய்உங்களுடனே இங்கே நிற்கிறோமேயென்று சொன்னதின் பிறகு நம்பினார்கள். அதன் பின்பு கிறிஸ்தவர்களுக்குள்ளும் அஞ்ஞானிகளுக்குள்ளும் முன்னே இல்லாத சமாதானமுண்டாகவேதுவாயிற்று. இந்தத் தீவார் மற்றுந் தீவாரைப்பார்க்கிலுஞ் சற்றே யுத்திவான்களென்பது அவர்களுடைய ஆயுதங்களில் வரைந்திருந்த வன்னங்களினாலே வெளிக்கும். மறுபடி இவர்கள் சீர்திருந்தின காலங்களிலோவென்றால் இந்த வன்னங்களுக்குப் பதிலாகத் தேங்காய்ச் சிரட்டைகளிற் கூட வேத வாக்கியங்களை வரைந்துகொண்டார்கள். (இன்னும் வரும்.)

---

## பிரமபத்திரப்பயன்.

[From “Dr. Mussey’s Essay on the Influence of Tobacco.”]

[Concluded from page 211.]

மேலைச்சஞ்சிகையிற் சொல்லியபடி புகையிலையைச்சுருட்டாகவேனும் பொடியாகவேனும் அசையாயேனும் பின்னொரு வகையாயேனும் பரிமாறிவருகிறது தேகவிருத்திக்கும் புத்திவிருத்திக்கும் தாட்சியென்றும் பலவகையான வருத்தங்களுக்கு ஏதுவென்றும் வைத்திய நூல்களை அறிந்தவர்களும் உடற்கூற்றிலட்சணங்களைத் தேர்ந்தவர்களும் மற்றும் அறிவாளிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்களென்று சகலருக்குந் தெரியுமே.இப்படிப்பட்ட நச்சுப்பதார்த்தமாகியபுகையிலையைநாம் உட்கொள்ளவேண்டியதென்ன? நம்முடைய சரீரத்தையும் புத்தி விவேகங்களையும் காலத்தையும் அபத்தமாய்ச் செலவிடவேண்டியதென்ன? புகையிலை நமது சரீரத்துக்கு இசைந்த பதார்த்தமல்லவே. பொடிபோடுகிறது வினைக்கெட்டவர்களுக்கு ஒரு வேலையன்றி வேறொரு காரியமும் இல்லையே. வாகட நூல்களிலே புகையிலை தேகசீவாதாரங்களுக்கு நலமானதென்றும் விதித்திருக்கவில்லையே. பிணியிலழுந்தியிருக்கிறவர்களுக்குப் புகையிலையை அவிழ்தமாக எப்போதேனும் எவ் வைத்தியனாகுதல் கொடுக்கிறதுண்டா? புகையிலையினாலே வருகிற மோசங்கள் பலவென்று முன்னே காட்டினோம். அதனால் வருகிற நன்மை ஒன்றேனுமுண்டென்று காணோம். தம்மைக் கெடுக்கும்படி தமது கைப்பொருளையுஞ் செலவிடுவாருண்டா? பணத்தைக் கொடுத்து நஞ்சைவாங்கி உண்பாருண்டா? ஒருவன் நாளொன்றுக்குப் புகையிலைகொள்ள இரண்டு சல்லி செலவு பண்ணினாலும் ஒருவருடத்துக்கு நாலு இறைசாலளவு செலவாகிறதே. ஒரு சமுசாரத்திலே நாலுபெயர் புகையிலைகுடிக்கிறவர்களேயாகில் வருடமொன்றுக்குப் பதினைந்திறைசாலளவு செலவாகுமே. ஒருகிராமத்திலே அஞ்ஞூறு குடிகளிருக்கில் வருடமொன்றுக்குஏழாயிரத்துச்சொச்ச இறைசால் செலவாகுமே. இத்தொகையைத் தருமகாரியங்களிலே செலவிட்டால் அதிக நலமாகுமே. இப்பணங்களினாலே எத்தனை அநாத பிள்ளைகளை ஆதரித்துக் கல்வி முதலியவைகளைக் கற்பிக்கலாம், எத்தனை அறவைப் பிணங்களைச் சேமம்பண்ணலாம். இவ்வளவு தொகையான பணமும் வீணிலே புகையாய்ப்போய் நம்முடைய பலமுங் கேடாய்ப்போகவேண்டியதென்ன? புகையிலையை உட்கொள்வதினால் வருங் கேட்டையும் அத்தைவிட்டதினால்வந்த நயத்தையும் பின்வருஞ் சரித்திரத்தினால் அறிந்துகொள்க—நியூகாம்ஷியர்(NewHampshire)என்னுந்தேசத்திலுள்ள நியாயதுரந்தரனாகிய ஒரு பிரபு பன்னிரண்டு வயது தொடங்கிப் பத்தொன்பது வருடக்காலமாகப் புகையிலையைப் பரிசித்துவந்தார். பின்பு நாலைந்துமாதமாகப் புகையிலையைச் சப்பாமல் அதிகப்படியாகக் குடித்து வந்ததினால் யாதொரு வேலைக்கும் போகாதபடி வியாதியாய் முடக்கப்பட்டுக்கிடந்தார். புருடத்துவமுள்ளவராய்இருக்கிறபோது இவருடைய தேகத்தின்நிறை (௱௬௫) இறுத்தலாயிருந்தது. பின்புகொஞ்சக்காலத்துக்குள்ளாக இவருடைய தேகத்தினுடைய நிறையானது குறைந்து (௱௰௭) இறுத்தலளவுக்கு வந்தது. மேலும் இவர் சாப்பாட்டிற் பிரியவீனமானார். இவருடைய பெலன் கெட்டுத் தேகத்தை உருக்கிச் சீர முயற்சியைக் கெடுத்துப்போட்டபடியாற் சாகிறதற்கேதுவாயிருந்தார். ஆனால் இவ்வகைமோசமெல்லாம் புகையிலை குடித்ததினாலே தான் உண்டுபட்டதெனக் கருதி உடனே இப்பழக்கத்தை விட்டார். கொஞ்சக்காலத்துக்குள்ளாகத்தேக வளர்ச்சியுள்ளவராயும் வேலையில் முயற்சியுள்ளவராயும் இருந்தார். மேற்கூறிய திட்டாந்தங்களினாலே புகையிலையைப் பரிசிப்பது எவ்விதத்திலுங் கேடெனக்காண்க.

## ஞானக்கும்மி.

[Satirical Poem on the Superstitions of the Hindus.]

### ௩௬. சாதிகள் பில்லி சூனியம்.

௨௱௮௫. இன்னின்னவனுனக்கேவல்விட்டானெனக்
இன்னின்னவன் பில்லி வைத்திருப்பான்
இன்னின்னார் சூனியஞ் செய்துபோட்டார்களென்
றெப்படிச்சொல்லுவாய் ஞானப்பெண்ணே.

௨௱௮௬. ஏவல்வந்தாலேயென்னசெய்யுமவ
ரிட்டகுறிகளென்னசெய்யும்
காவலாயுன்னைச் சம்மனசு நின்று
காக்காதே போகுமோ ஞானப்பெண்ணே.

௨௱௮௭. பில்லிசூனியத்தாலேயொருவனைப்
பேசாமற்கொல்லயிடமானால்
வல்ல பராபரன் பூமியிலில்லையோ
மதியகெங்கடி ஞானப்பெண்ணே,

௨௱௮௮. பில்லிவைத்துக்கொல்லக் கூடுமென்றாலப்போ
பீரங்கிக்குண்டுகள் கத்திகளேன்
வல்லமையாகிய சேவகரேனிந்த
மண்ணுளுவோருக்கு ஞானப்பெண்ணே.

௨௱௮௯. கொச்சியிலும் மலையாளத்திலும் பில்விக்
கொடுமைமெத்தவுண்டென்றுக்கா
லச்சமற்றோர் தனைக்கூடாதவன்
லெச்சைகெட்டதேன் ஞானபபெண்ணே.

௨௱௯௰. தொட்டியனல்லோ கட்டப்பொம்மன்கன
சூனியத்தில் மிகுந்தோனல்லவோ
கட்டியவன்றனைத் தூக்கிலேபோடாமற்
கடந்துபோனானோ ஞானப்பெண்ணே.

௨௱௯௧. இன்னமிப்படித்தேசத்திராசரி
லெத்தனை சூனியக்காரருண்டு
பின்னுமிரோப்பியர் தங்களிலாரையும்
பேர்த்ததுண்டுமோ ஞானப்பெண்ணே.

௨௱௯௨. சூனியக்காரனனுப்பியபேயது
சூனியக்காரனைத்தானேகொன்று
சூனியக்காரன் கடைசியிற் பற்போய்த்
துஞ்சுவானடி ஞானப்பெண்ணே.

௨௱௯௩. எந்தெந்த வித்தைகள் செய்தாலுமவ
னெப்படியெப்படிப் பார்த்தாலும்
மந்திரத்தினால் மாங்காய்விழுவதோ
மாயமோ சொல்லடி ஞானப்பெண்ணே.

௨௱௯௪. எந்தை பரனுனைப் பார்க்காரோ அவர்
வந்த வினைதனை நீக்காரோ
தொந்தமிகும்பல சூனியக்காரரின்
தந்திரமென்செய்யும் ஞானப்பெண்ணே.

௨௱௯௫. சூனியக்காரனைச் சூனியக்காரியைச்
சொற்பனவாதியைக்கொன்றுவிட
ஞானபரனுனக்கெச்சரித்தாலும் நீ
ரண்டகஞ் செய்கிறுப் ஞானப்பெண்ணே.

---

## மணவாளன் மணவாட்டியை அழைத்தல்.

[ விருத்தம். ]

ஆபிரகாமின்வித்தாராயிரம்வருடக்காலஞ்
சாபதின் மகிழ்ச்சியோங்குஞ் சருவசந்தோஷநாளிற்
றீபுரத்திசருவேவின்றேவனார் சீயோன் மாதை
மாபிரியத்தாற்கூட்டி வழநகர் புகுந்தானன்றே.

அன்னப் புறுவேபெண்பின்னேவா நண்புறவே
அதிருபவதியென்னுத்தமிபர்பனி.

௧. வன்னப்பசுங்கிளியேயெருசாலேமின்—மங்கையேசீயோன் குமாரி—வாலப்பிராயத்துலாசப்பூங்கோதையே—வந்துநந்தோட்டத்தெழுந்துகுலாவியே—வாழ்ந்து சுகித்திருப்போம்-இருபேருஞ் சேர்ந்து களித்திருப்போம்— என்பிரிய—மானேதேனேயென்மொழியை விசுவாசமாய்க் கேண்மின்னே நேசமாய்ச் சொல்கிறேன் அன்.

௨. மன்னன்றவீதுமகன்சலமோன்சொன்னவாக்கியம்யோக்கிய புராணம் இம்— மானுவேல் தேவாட்டுக்குட்டி நமக்கின்று வந்ததுவே கவியான மிக்க—உன்னத கீதத்தினெட்டதிகாரங்களுக்கிதவேதப்பிரமாண மென—துத்தமி சீயோன்குமாரத்தியேயுனக்குற்றதெனவினி நாணம்—கன்னியதிருபவன்னியேகற்பலங் காரியேபாரியே வீரியமாய்நாம்—கானகத்தூடுலவிச்சிங்காரக் காவெங்கணுங்குலவித் திரும்புவோம்—கண்ணேபெண்ணே பண்ணும் பிரசங்கம் காதலாய்க் கேளென்தன்மாதே நான் சொல்கிறன் அன்.

௩. மாரிகாலஞ்சென்றதுநின்றது மழைவிட்டுத்தீர்ந்தது பல—வன்னப் புஷபங்கள் பூமியிற்காணுது வழமைசார்ந்தது ஒகோ—காரிகையாரே குருவிகள் கூவுங் காலஞ் சேர்ந்தது இதோ—காட்டுப் புருவின் சத்தங்கேட்குது காதுக்கேர்ந்தது—சீரினத்திமரங்காய்களைக்காய்க்குது திவிராட்சிச்செடிகள் பூப்பூக்குது—தேசமெல்லாஞ் சுகந்தபரிமள வாசங்கமகமெனமணக்குது—சித்திரமேயென் சிநேகிதியே பசுந்—தத்தையே சற்றுநடந்துவா போவோம் அன்.

௪. சந்தனச்சாலைகள் சண்பகச்சோலைகள் தண்ணீர்த்தடாகங்க ளுயர்—சுந்தரிகத்தின் சகல விருட்சங்கள் நாரதுகுங்குமங்கள் அதி—விர்தைவிந்தைக்கருவாமரம்பூமரம்வெள்ளைப்போளங்கள் மகாசுகந்தவர்க்கச்செடிகள்பலாவிதம் நிறைந்தகாவனங்கள்-அந்தமிகும்நீரூற்றுகளுஞ் சீவனுனதண்ணீரின்றாரகதும் லீபனோனுந்தி வருவதல்லோ வாய்க்கால் புரண்டோடி வருவதல்லோ சந்தோட—முத்தமவாடையுந் தென்றலும் நண்பாக வுகந்துவீசுது மகிழ்ந்துலாவுவோம் அன்ன.

௫. தண்டலைப்பூங்காவனத்திநேரமாய்ச் சாரிப்பெருவழி சேரும் அங்கே—தாபோர்ப்பருவதம் ஏர்மோன் மேட்டிலுஞ் சவுக்கியங்களிகூருங் கானுன்—மண்டலம் போற்றெருசலேமிற் சீயோன்மலைதெரியுது பாருஞ்—சால்மோன் மண்டபத்திலிருந்திளைப்பாறித்தேவாலயத்தேசெல்வோம் வாருங்—கண்டகிராமங்களில் விராத்தங்குவோம் கப்பலிற்சற்றுநேரங் கண்ணுறங்குவோங் -காதன்மிகுந் தேனே யேதேனென்ற காவினிற் செந்தேனேநடந்துவா—கட்டழகியுந்தன் கண்கோண்டு பார் மோட்ச பட்டணமுமென் பிதா வீடுங் கிட்டிற்று அன்.

௬. விஸதாரமானயெருசலேம்பட்டணச் சித்திர வாசல் பன்னிரண்டு அதி—னலதிவாரங்களாறிரண்டுச்சிதரத்தினக்கற்களின் திண்டு- பரிசுத்தப்பளிங்கஸபிக்கற்போற்காந்தியின்கூடரெறிப்பதுமுண்டு —ஒரே நித்திலவாசல் பன்னிருவிச்சேத்திர முத்துக்களானதுங்கண்டு —சுத்திரச்சாவடி வீதிகள்யாவற்றுஞ் சுத்தந்தெளிவின் கண்ணுடிப்பொன்னே-மா சம்பிரமகிழ்ச்சியதாய்நித்தியானந்த கெம்பீரகீர்த்தனமாய்ச் சுவிசேட—சாஸதிரிநெல்லைவேதநாயகனும்வந்து தோத்திரஞ் சொல்லுவான் கேட்டுக்கொண்டிருப்போம் அன்

---

## ஒருகதை.—Fables.

ஒரு தேசத்தில் இருந்து மற்றொரு தேசத்துக்குப் போகிற ஒரு பாட்டை சாரி தன் குதிரையை ஒரு குளக்கரையில் இருக்கு மொண்டிமரத்திற் கட்டிப்போட்டுத் தண்ணீரோரத்திலிருந்து கொண்டு கட்டுச்சாதஞ் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்போது வழிப்போக்கனாகிய ஒரு துலுக்கனும் அங்கே இறங்கித் தன் குதிரையையும் அந்த மரத்திற் கட்டப்போனான். அந்தத் தமிழன் துலுக்கனைப்பார்த்து கூவியென் குதிரை மெத்தவும் பொல்லாதுன்குதிரை திடமற்றதங்கே கட்டாதே கட்டாதே யென்றான். துலுக்கன் முரட்டாட்டமாய் நான் அதிலே கட்டுவேனென்று கட்டிப்போட்டக்கரையிலுட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அந்த இரண்டு குதிரையும் ஒன்றுக்கொன்று சண்டையிட்டிவர்களோடிவந்து தடுக்கிறதற்குள்ளே தமிழனது குதிரை துலுக்கன் குதிரையை உதைத்துக் கடித்துக்கொன்றுபோட்டது. துலுக்கன் தன் குதிரை நட்டத்தைக் கொடுக்கச்சொல்லித் தமிழனை மடிபிடித்திழுத்துக்கொண்டு நியாயாதிபதியிடத்திற்போக நியாயாதிபதி தமிழனைப்பார்த்து என்னசொல்லுகிறுயென்றுபலதரங் கேட்கத் தமிழன் ஊமைபோலிருந்தான். நீதிக்காரன் துலுக்கனைப்பார்த்து இந்த ஊமையை என்ன செய்யலாமென்றான். துலுக்கன் ஐயா இவன் பாசாங்குபண்ணுகிறான். அந்த மரத்திலே என்னைக் குதிரை கட்டாதே கட்டாதேயென்று முன்னே பேசினானென்றான். நீதிக்காரன் கேட்டுக் குலுங்க நகைத்து உன் குதிரை நட்டமிவன்கொடுக்கவேண்டிய தில்லைப் போவென்றனுப்பிவிட்டான்.

# உதயதாரகை—MORNING STAR.

## Jaffna, November 28th, 1844.

### HINDU SUPERSTITION.

The Rev. Mr. Pettit, missionary of the Church Missionary Society, at Tinnivelly, narrates in his Journal the following singular instance of Hindu Devoteeism.

*A singular instance of Hindu Devoteeism.*—A brahmin from the North has visited these parts and is now on his way to Cape Comorin, if he has not already reached it. He rolls himself over and over on the bare ground, about three or four miles each day, on his way to the above-mentioned place; and it is said that he has travelled in this manner all the way from Benares, in doing which he has consumed nine years and three months. He sets out at dawn, with thick cloths tied round his body and temples, and having reached the village fixed upon, he performs his devotions and spends the rest of the day with his family, who travel with him in bullock-carts. He is fanned, as he rolls along, by his son, a youth of ten or twelve years of age; while the musicians of the village which he leaves, or of that to which he is going, accompany him with music and shouting; thousands of people, gazing with admiration upon his progress and applauding him as *"a great soul"*—a most religious man. When he comes to a tank or river or other places which he cannot cross by rolling on the ground, he walks through them; and on the other side rolls the same distance along the bank and back again. When he reaches Cape Comorin, he is to set a plantain, and wait there till he offers the fruit of it to the deity whom he worships; after which, they say, he is to roll back again to Benares on the other side of the Ghauts. He is a stout man, of about forty years of age and is said to be not much injured by his devoteeism. His act instead of being regarded as a waste of time and labour, is praised by the Hindus generally, as one evidence of the highest wisdom and magnanimity: yet some of them, enlightened probably by Christianity, regard it as folly, unless indeed, which is not certain, he derives a splendid profit from it in the offerings of the people. Certain it is that his family maintain a most respectable appearance; but it is said that he was a man of property before he set out on his strange pilgrimage.

Many will probably consider this an instance of mistaken piety; but the real cause of it being known will perhaps explain most other instances of Hindu devotion. It appears he had no child, and being unable to bear this evil—which the Hindus ascribe to the sins of a former birth made a vow to his god, that if he would grant him a son he would undertake the penance which he is now performing. A son was born to him; the same who fans him as he rolls along. It is said, but this is propably a tale, that he did not at once begin his vow, in consequence of which, the child became blind; and that when he set about his undertaking, a restoration of the child's sight was granted by the deity. Perhaps the business is tolerably pleasant to the man by this time, accompanied as he is by pomp and praise; but even if it were not, his fear of losing the child by the anger of the god would be sufficient to keep him faithful to his promise. The notion of atoning for sin, as such, has in all probability never entered his mind; he only conceives that some sin or other—of which he has no knowledge—contracted in a former state of existence, operated unfavorably to his domestic happiness in this world; and there being no way of removing the calamity without removing the imagined cause, he takes a method which he supposes will appease the displeasure of the deity who is concerned in the punishment of the sin.

*Decline of Idolatry in Calcutta.*—The *Friend of India* of the 31st ult. in remarking on the festivities of the late Doorga Poojah, in Calcutta and its vicinity states —that "the splendor with which religious festivals are celebrated is of comparatively modern origin. It is scarcely more than a century old. It dates from the period when the large Zemindarees began to be consolidated in the hands of the Hindus during the vice-royalty of Moorshed Kooly Khan. That period was marked by the revival of Hindu influence in Bengal. The landed aristocracy which then arose, dared, for the first time after the lapse of many centuries, to exhibit their wealth by the splendour of their religious solemnities. The battle of Plassey, which broke the strength of the mohammedan power, gave increased importance and freedom to the Hindu Rajahs, as they began to be called, and encouraged them to give these festivals additional magnificence. It is generally believed that the costly celebration of the Doorga-poojah, originated with the Rajah or Zemindar of Nuddea, Rajah Krishnu Chundru Roy, who gave the tone to Hindu society in the age in which he flourished. His example was emulated by the aristocracy of wealth which grew up during the first twenty or thirty years of our rule, when we were new to the administration, and a boundless field was opened to the rapacity of our native officials. These men, loaded with the spoils of districts, crowded to the new metropolis we had raised, and vied with each other in the extravagance of their expenditure on every occasion of domestic or religious festivity.

There can, however, be no question that the hold of the Hindu Idolatry on the mind of a large portion of the influential class of society in Calcutta has been weakened to much greater degree within the last quarter of a century, than perhaps at any time since this idolatry was introduced. There is a large and constantly increasing body of native youth, on whom our colleges have bestowed a liberal education, who are impatient of the trammels and the foolery of the reigning superstition, and who, when they come to direct the influence which their families employ in society, will probably discontinue these exhibitions and give a new direction to the native mind in the metropolis. And the conduct of the great conservative Hindus of Calcutta, who are the main stay of Hinduism is gradually paving the way for its downfall. The meretricious amusements by which they are endeavouring to prolong the attraction of their festivals, imparts a new character to them. We perceive that the great corryphæus of Hindu orthodoxy, the Rajah Radhakanter Deb, has this year associated European rope-dancing with the Doorga-poojah, and introduced the sports of Vauxhall gardens into the presence of the idol. The employment of Mohammedan courtezans to dance before unbelievers in honour of a Hindu deity was a most heterodox proceeding; but the engagement of Mons. Le Rosiere was a still more outrageous departure from the precepts and principles of the Vedas and Menu. When such practices, so utterly repugnant to the genius of Hinduism, so entirely subversive of its spirit, are sanctioned by a man of Rajah Radha-Kanter's character and standing in the Hindu community, what conclusion shall we draw but that a great change is in progress among the natives of the metropolis, and that the influence of Hinduism as a religion, is felt to be feebler, from the necessity of supporting that influence by theatrical exhibitions.

### TROPICAL AGRICULTURE.

(From the Colombo Observer.)

Every person conversant with the advantageous position, and capabilities of the magnificent Island of Ceylon, as becoming a great agricultural country for the production of all tropical produce, should aid in giving what information they possess towards improving it.

Already have the central province, and the high lands of Saffragam become a busy scene of industrious enterprise, producing coffee, which in the course of a little time will be second to none in the London market; the best district I have yet seen for cotton is the Bentenne and Wellase countries leading to Mandore and Batticaloe, where the manufacture of cotton cloth is carried on by the Moormen to some extent.—Their fabrick of table cloths and napkins are of a beautiful texture, which alone tests the quality of the raw material—the soil and climate are peculiarly adapted to this production.

The locations selected for sugar in the Maritime districts, will have a good deal to contend with, before the planters can bring the soil to produce a rich quality, the land being of a siliceous nature to a considerable degree, but by attention to compost suitable to the desired purpose, I think all defects may be overcome and an excellent return made; the best quality of sugar land that I have yet seen is that from Tangalle inwards to the Booth country, here the land is possessed of every good quality to make the finest sugar and largest returns, but this country has its objections. The traveller will perceive on his journey, the sad remains of temples, tanks, and villages, abandoned clearly from the want of water irrigation, which can easily be accomplished, as it is purely a Canal country, being free from any serious obstructions in Canal formations; if main lines of Canals were formed twelve feet wide by 6 feet deep, to be supplied with water from the adjacent rivers, their banks could be located in rice fields, and in the rear extensive allotments of sugar lands could be subdivided in 1 square mile tracts, and granted or sold by Government at a mere nominal value, to parties binding themselves to cultivate a certain portion of land with sugar and to lay down suitable machinery &c. &c.—within a given period, on pain of forfeiture; this would soon open this fertile and unpopulous country—it would become the Garden of Ceylon, and a principal contributor to its Exchequer.

In my young days when engaged in constructing Canals, one laborer could excavate 12 feet square and six feet deep in a day, but in this country I would say it will take two laborers to accomplish the same, which would be cheaply performed, costing only one shilling!—The grasses all over this country are so excellent that the traveller is independent of the burden of finding corn for his Cattle.

*Spring Pallas, 13th Nov. 1844.* A Traveller.

### PRO BONO PUBLICO.

Dear Star,

"A Spectator," in your last No. under this head, declares, "it is the painful lot of the people of Jaffna that when numbers of them are attacked with any infectious disease, they are removed to a *miserable hut*, erected in the island generally known by the name of *small pox island* (சிறுத்தீவு) situated over against the Jaffna Custom House, where they are like *beasts of burthen* stretched along the *wet ground*" "exposed to the shifting gales from every side, and very poorly taken care of."

The impression left upon the mind of the reader after perusing this statement is, that there is no proper provision made by the public authorities, for the comfort and protection of the patients on the small pox island. As one truly interested for the public good, I beg through your columns to inquire of "A Spectator" if *he* knows from personal observation, what accommodations *are* provided by government for patients on the small pox island? and if not, why, at this time, when the disease is prevailing in some villages, and the unfounded prejudices of the people against their friends being removed to the hospital when attacked with this disease, are so strong, he should give currency to such erroneous statements, calculated to strengthen the prejudices of the natives, and throw impediments in the way of the public officers in the discharge of their duty? The necessity for a hospital where infected persons may be removed, to avoid spreading contagion through the community, is acknowledged in all civilized and Christian countries. Such hospitals, to answer their purpose must be remote from the haunts of men, and be visited only by the authorised attendants. From the nature of the case, there will be instances of hardship and suffering in such circumstances, but the public good requires this sacrifice of personal feeling and comfort, and it should be cheerfully made. It is admitted that the best possible provision should be made for the comfort of the patients. But in the absence of sympathising friends, which is generally felt as the severest privation, what more can be expected than

"proper protection from the weather, the best medical aid, and a proper and reasonable supply of food?"

Now I venture to assert, in opposition to the statements of "A Spectator," that all this is supplied to the patients on the small pox island. And if they are found *lying like beasts of burthen on the wet ground* it is not from *necessity*, but from *choice*, and if they are exposed to the gales, it is because they do not avail themselves of the shelter afforded for their protection. Surely, no blame can be attached to others for their wilfully exposing themselves to sufferings of this sort.

I beg to submit for the consideration of your candid readers whether the real difficulty does not lie in the want of distinct treatment for the patients of different castes that may happen to be there together. It may easily be understood, that a patient of strong caste feelings, would sooner lie in the mud, and expose himself to the weather, than lie down on a cot that had been occupied by one of inferior caste. And so he would be likely to reject the food usually provided, unless proper caste distinctions were observed; but the community ought to know that these distinctions have their origin in the pride and selfishness of man and were never created by God, and ought not to be regarded by a Christian government. All that humanity and religion require in the cases of suffering patients is, that proper provision be made for their *real*, and not for their *imaginary* wants. And those whose happiness stands in fostering and preserving the unnatural, invidious, and—I may say, inhuman distinctions of caste, cannot justly complain of their sufferings, (which are purely self-inflicted) when they come under the operation of a humanizing and Christian system of treatment, which regards with equal concern the high and the low, the rich and the poor.

Yours very truly,

*November 25, 1844.* INVESTIGATOR.

---

*The Season.*—Great apprehension has been felt by the farmers generally that their crops of paddy would fail on account of the unusual dryness of the season, and in some localities a strange sort of destructive larva has made its appearance in such numbers as to devour whole fields of the young paddy, and every kind of low vegetation. At Batticotta, we understand, it has been hardly possible to shut them out of the houses, and that the water of the wells is considerably tainted by the numbers that have crept in and perished. The larva is said by the natives to be unlike any species they have before seen. We do not know that any efforts to guard the crops from their attack has proved successful. If they have, we should be glad to know it, and publish it for general information. We should also be glad to be informed, when and where these larva first made their appearance, and how far their depredations have extended.—To the great relief of those whose crops were suffering only from want of rain, since Saturday the 23d instant we have been favoured with frequent showers, which if followed by others will redeem those crops that were threatened with destruction from a want of rain.

